DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.262/19

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name விஜயகுமார் | Father’s Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அல்லிநகரத்தில் குடியிருக்கிறேன். கைக்கோராபைானன்ஸ் நிறுவனத்தில் வேலை செய்துவருகிறேன். அசா1 என் மாமா. எதிரியை தெரியும். கடந்த 7.4.2019ம் தேதி என் அக்காவிற்கு வளைகாப்பு போடுவதற்காக போடிக்கு வேனில் சுமார் 30 பேர் சென்றோம். வளைகாப்பு முடித்துவிட்டு போடியிலிருந்து அல்லிநகரம் செல்லும் மெயின்ரோட்டில் தீர்த்ததொட்டி கோவில் அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிசென்றோம். அப்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி தேனியிலிருந்து தேவாரம் செல்லும் PPP என்ற தனியார் பேருந்து அதிகவேகமாகவும், கட்டுப்பாடலில்லாமலும், அஜாக்கிரதையாகவும் பாதை மாறி வந்தும் எங்கள் வேனின் மீது மோதியது. அதில் என்னுடன் வந்த என் அப்பா வெற்றியரசன், சிற்றரசன், பாட்டி பேச்சியம்மாள், அத்தை சரஸ்வதி ஆகியோர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். எனக்கு இடது கையிலும், வலது காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு எனக்கு பிளேட் வைத்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. பின்னந்தலையிலும் காயமானது. என் சித்தி மகள் ரீட்டா என்பவருக்கு காயமாகி க.விலக்கு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது இறந்துவிட்டார். அந்த வேனில் சென்ற சுமார் 18 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. அதன்பிறகு க.விலக்கு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் சென்றோம். சம்பவம் தொடர்பாக அசா1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். அவர்கள் இன்னறய தினம் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்று வழக்கை வேறு தேதிக்கு ஒத்தி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க நியாயமான காரணம் முன் வைக்கப்படாததால் வேண்டுகோள் நிராகரிக்கப்படுகிறது. சாட்சி குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.